ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,789 — 1959 ජූනි 26 වැනි සිකුරාදා — 26.6.1959

11,789 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV — உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோத்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | — | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்–வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | ஆதனவிற்பனைகள் .. .. .. | — |
| துணைவிதிகள் .. .. .. | 562 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகாரநிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## துணைவிதிகள்

### கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்படி யாழ்ப்பாண மாவட்டத்து அல்லைப்பிட்டி கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் ஆக்கியதும், 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ "கெசெற்"றில் பிரசுரமான பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவின் (3) ம் உட்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சர் அங்கீகரித்ததுமான உபவிதிகள்.

வீ. சி. ஜயசூரியா,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1959 ம் ஆண்டு மார்ச் மீ 13 ந் உ.

#### விளம்பரப் பலகைகள் பற்றிய உபவிதிகள்

1. சங்கத்தால் விளம்பரப் பலகை எதுவும் நிறுவப்படுங்கால், தலைவரால் அதன் பொருட்டு வழங்கப்பட்ட ஒரு அனுமதிச் சீட்டின் அதிகாரத்தின்பேரிலன்றி, விளம்பரம் எதையும் காட்டுவதற்கு அந்த விளம்பரப் பலகையை எவரும் உபயோகிக்கலாகாது.

(2) (1) உபவிதி 1 ன் படியான ஒரு அனுமதிச் சீட்டுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அந்த விளம்பரத்தைக் காட்டுதற்கு ஆரம்பிப்பதற்கு எண்ணியுள்ள திகதிக்கு ஏழு தினங்களுக்காவது முன்னர் தலைவரிடம் கொடுக்கவேண்டும்.

எனினும், ஏதேனுமொரு குறித்த விஷயத்தின் விசேஷ சந்தர்ப்பங்களில் இப்பந்தியின் முந்திய ஏற்பாடுகளில் சொல்லப்படும் கால அளவுக்குள் கொடுக்கப்படாத விண்ணப்பம் எதையும் தலைவர் ஏற்றுக்கொள்ளலாம்.

(2) பந்தி (1) ல் சொல்லப்படும் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும், விண்ணப்பதார் அந்த விளம்பரப் பலகையில் காட்டுதற்கு எண்ணும் விளம்பரத்தின் பிரதி ஒன்று அனுப்பப்படவேண்டும்.

(3) (1) ஒரு விளம்பரத்தைக் காட்டுதற்கு எந்த விளம்பரப் பலகையையும் உபயோகிப்பதற்கான விண்ணப்பமொன்றைத் தலைவர் அங்கீகரிக்குமிடத்து, அவர் அவ்விளம்பரப் பலகையை உபயோகிப்பதற்கு அந்த விளம்பரப் பலகையின் ஏதாவதொரு பக்கத்தின் ஒவ்வொரு சதுர அடி இடப்பரப்புக்கும் ரூ. 2.50 வீதம் கணிக்கப்பட்ட ஒரு கட்டணத்தை ஒவ்வொரு வருடமும் செலுத்துமாறு விண்ணப்பதாரரைப் பணிப்பார்.

(2) முந்திய பந்தியில் விதிக்கப்பட்டுள்ள கட்டணம் செலுத்தப்படும் வரை, விளம்பரப்பலகை எதையும் உபயோகிப்பதற்கான அனுமதிச் சீட்டு தலைவரால் வழங்கப்படமாட்டாது.

4. (1) விளம்பரம் எதையும் காட்டுவதற்கு எவருக்கேனும் அனுமதிச் சீட்டு வழங்கப்படுங்கால், தலைவர் அவருக்கு—

(அ) விளம்பரப் பலகையில் காட்டவிருக்கும் விளம்பரத்தின் பிரதியில் அனுமதிச் சீட்டின் இலக்கத்தையும் திகதியையும் இடுமாறு ; அல்லது

(ஆ) அனுமதிச் சீட்டுக்கான கட்டணம் செலுத்தப்பட்டமைக்கு அடையாளமாக முத்திரை யிடுதற்குத் தலைவர் முன்பு அப்பிரதியைக் கொண்டுவருமாறு

பணிப்பார்.

(2) இந்த உபவிதியின் (1) ம் பந்தியின்படி தலைவரால் பணிக்கப்பட்ட ஒவ்வொருவரும் அவர் பணித்தபடி செய்தல் வேண்டும்.

5. இந்த உபவிதிகளின், வாக்கியத் தொடர்பு பற்றி வேறு விதம் கொள்ளவேண்டியிருந்தாலன்றி—

"விளம்பரம்" என்பது விளம்பரப் பாங்குள்ள அல்லது முற்றுக்வேனும் அல்லது அற்பசொற்பமாகவேனும் விளம்பரத் தேவைக்கு பயன்படும் வார்த்தை, எழுத்து, இலக்கம், குறி, பிரசித்தப் பத்திரம், பலகை, உபாயம், மாதிரி அல்லது பிரதிமை எதையும் உட்படுத்தும் ;

"தலைவர்" என்பது சங்கத் தலைவர் எனப் பொருள்படும் ;

"சங்கம்" என்பது அல்லைப்பிட்டி கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் எனப்பொருள்படும் ;

"விளம்பரப்பலகை" என்பது விளம்பரங்களைக் காட்டுதற்காக சங்கத்தால் நாட்டப்படும் எதும் கட்டுமானம், ஆதாரம், கம்பம், பலகை, சுவர் அல்லது வேறு எதும் உபாயம் எனப் பொருள்படும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது